J. R. T. S.] GENERAL SERIES. [No. 6.

# TRUE DOCTRINE.

[Addressed to Gooroos, &c. showing 1. That there is one God, and that he only is to be worshipped: 2. That there is no transmigration, &c. 3. That the death of Christ alone can atone for sin.]

# மெய்யுபதேசம்.

இரண்டாவது.

வெட்டாதசக்கரம் பேசாதமந்திரம் வேறொருவர்க்
கெட்டாதபுட்பம் இறையாத மஞ்சனம் எண்முடிக்குக்
கட்டாதலிங்கம் கருதாதநெஞ்சங் கருத்திலுள்ளி
முட்டாதபூசையென்றே குருநாதன் மொழிந்தனனே.

சருவலோக சிட்டிகராயும் நரசீவரட்சகராயுந் தம்மிலே தாமே சுத்தமுடையவராயுந் தம்மை அடைந்தவர்களைச் சுத்திகரித்துப் பக்குவ ஆத்துமாக்களாக்குகிறவராயும் இருக்கிற பராபரன் தமது சிட்டிகளாகிய மனிதர் கதி அடையும் பொருட்டாய் ஈந்தருளிய சுவிசேஷமார்க்கத்தைப் போதிக்கும்படி வந்திருக்கிற சுவிசேஷ போதகர்கள் இத்தேசத்தில் வழங்கிவருகிற சைவசமயக் குருமாருக்கும் பிராமணருக்கும் தமது கடவுளுடைய கிருபாகடாட்சத்தினாலே இருமைப் பேறும் பெறுக விரும்பி அறிவிக்கிற நற்செய்திகள்.

6th. Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5,000.
1843.

நாங்கள் இவ்வூரில் இருக்கும் தமிழ்ச் சனங்களும் கிறிஸ்துமார்க்கத்திற் காட்டிய மெஞ்ஞான போதகத்துக்கு அமைந்து நடக்கவேண்டுமென்று போதிக்கிறோம். நீங்களோ சைவசமய முறைப்படி நடக்க வேண்டுமென்று போதிக்கிறீர்கள். இவ்விருவகை மார்க்கமும் வெளிச்சமும் இருளும் போல மிகுந்த வித்தியாசத்தைக் கொண்டதாய் இருக்கின்றது. எப்படியென்றால் உலக பிரபஞ்சகாரண கருத்தா ஒருவர் மாத்திரம் உண்டென்றும் அவரையன்றி வேறொருவரை வணங்கப்படாதென்றும் அவரை வணங்கும்படி விக்கிரகங்களை வைக்கப்படாதென்றும் நாங்கள் போதிக்கிறோம். நீங்களோ அப்படி மேலான தேவன் ஒருவர் உண்டு. அவர் குணஞ் செயல் முதலான யாதொன்றும் இல்லாமல் இருக்கிறபடியால் அவருக்குச் சோக அதிகாரம்பெற்றிருக்கிற தேவர்களுக்குப் பாவனையாக விக்கிரகங்களை உண்டாக்கி வைத்து வணங்கவேண்டுமென்று போதிக்கிறீர்கள்.

மனிதர் இறந்த பின்பு அவர்களுடைய ஆத்துமா மோட்சத்திலாகுதல் நரகத்திலாகுதல் சேருமென்று நாங்கள் போதிக்க நீங்களோ அவர்கள் கன்மாதி மலம் நீங்கும் அளவும் பிறந்து இறந்து நரக சொற்கங்களைச் சேர்ந்திருந்து முத்தியடையுமென்று போதிக்கிறீர்கள். நாங்கள் கிறிஸ்துநாதர் செய்த பிராயச்சித்தத்தினாலன்றிப் பாவந் தீராதென்று போதிக்கிறோம். நீங்களோ தானாதி கருமங்களினாலும்

விக்கிரகாராதனைக்கடுத்த சடங்குகளினாலும் அந்தியேட்டி முதலான கிரியைகளினாலும் பாவந்தீருமென்று போதிக்கிறீர்கள். இப்படி அனேக வித்தியாசங்கள் இருப்பதினாற் கிறிஸ்துமார்க்கப் போதகமோ சைவசமயபோதகமோ உண்மையான தென்பதை அறியும்படி நீங்கள் தானே இவ்விரண்டையுஞ் சீர் தூக்கிப் பார்ப்பீர்களாக.

---

### ௧. கருத்தா ஒருவராய் இருப்பதினால் அவரையே வணங்கவேண்டுமென்பது.

தேவன் ஒருவராய் இருப்பதினால் அவரை மாத்திரம் வணங்கவேண்டுமென்று நாங்கள் போதிக்க நீங்கள் அவர் அரூபியாயிருந்து பஞ்ச கிருத்தியங்களை நடத்தக் கூடாதபடியால் பிரமா முதலான பஞ்ச கர்த்தாக்களை உண்டாக்கி அவர்களுக்குப் படைப்பு முதலிய பஞ்ச கிருத்தியங்களை நடத்தத் தத்துவங் கொடுத்தாரென்றும் அவர்களுக்குப் பாவனையாக விக்கிரகங்களை உண்டாக்கி நமஸ்கரிக்க வேண்டுமென்றுஞ் சொல்லுகிறீர்கள். அது சரியல்ல.

> தன் வயத்தாதல் முதலிலனாதல் தரும்பொறியுருவிலனாதல்—மன் வயத்தெல்லா நலமுளனாதல் வயின்றொறும்
> வியாபகனாதல்—பின்வயத்தின்றி ஒருக்குடனினைத்தும்
> பிறப்பித்த காரணனாதல்— பொன்வயத்தொளிர்வான்
> முதலெலாவுயிரும் போற்றுமையிறைமையினிலையே.

இந்தக் கவியிலே சொல்லிய ஆறு குணங்களும் அநாதி காரணமான கடவுளுக்கே உடையது. அந்த ஆறு குணங்களுக்குள்ளும் அரூபமாய் இருப்பதும் எல்லாரையும் எல்லாவ

ற்றையும் படைக்கிறதும் அவருக்குக் குணமா
யிருக்க அவர் அரூபியாயிருந்து உரூபங்களை
உண்டாக்கக் கூடாமற் பிரமாவை உண்டாக்
கி அவரைக் கொண்டு உலகத்தைச் சிட்டிப்பி
க்கிறாரென்று நீங்கள் சொல்வதெப்படி? அல்
லாமல் அவர் உரூபமுள்ளவர்களைச் சிட்டிக்க
க் கூடாதாகில் உரூபமுள்ள பிரமாவைச் சிட்
டித்ததெப்படி? மேலுங் கிறிஸ்தவர்கள் கடவு
ள் பிதாக் குமாரன் பரிசுத்தாவியாய் இருக்கி
றாரென்று சொல்வது போல நாங்களும் அவ
ர் பிரமா விட்டுணு உருத்திரனாய் இருக்கிறாரெ
ன்று சொல்லுகிறோம். அதற்கும் இதற்கும் வி
த்தியாசம் என்னவென்கிறீர்கள். நாங்கள் சொ
ல்லுகிற பிதாக் குமாரன் ஆவியானவர் மகத்து
வத்திலும் நற்குணத்திலும் பரிசுத்தத்திலும் ம
ற்றுள்ள தேவ இலட்சணங்களிலும் வேறுபடா
தவருமாய் மனிதருடைய ஆத்தும இரட்சிப்பு
க்கடுத்த முத்தொழிலைச் செய்யும்பொருட்டு
மூன்று பேதமான காரண நாமத்தைக்கொண்
டவருமாய் இருக்கிறார். பிரமா முதலானவர்க
ளை ஒருவருடைய செய்கைக்கு ஒருவர் வே
றுபாடான செய்கைகளைச் செய்கிறவர்களும்
ஒருவரில் ஒருவர் உயர்ந்துகொள்ள விரும்பு
கிறவர்களும் ஒருவரை ஒருவர் பகைக்கிறவர்க
ளுமாய் இருக்கிறதுமன்றி வெவ்வேறான பதவி
களில் இருக்கிறவர்களும் வெவ்வேறான பெ
ண்களை மனைவிகளாக வைத்து இல்லாச்சிரம
முறையை நடத்துகிறவர்களும் அநேக மு
றை விபசாரத்தில் உட்பட்டவர்களும் பிறந்தி

றந்து இவ்வித துன்பங்களை அநுபவித்தவர்க
ளுமாய் இருக்கிறார்கள். இதினாலே நாங்கள் வ
ணங்குகிற பராபரனும் உங்கள் திரிமூர்த்திக
ளுஞ் சரிவந்தவர்கள் அல்ல. மேலும் பிரமா
வானவர் விட்டுணுவோடே வாக்குவாதம் பண்
ணிச் சிவனுடைய முடியைத் தேடிப்போய்க்
காணாமல்வந்து கண்டேனென்று பொய் சொ
ன்னதினாற் பூமியிலே அவருக்குப் பூசை இல்லா
மற் சபிக்கப்பட்டுத் தமது பூசை மகிமையை
இழந்துபோனாரென்றும் விட்டுணுவானவர் சி
வனும் பார்பதியுஞ் சூதாடினபொழுது மத்தி
யஸ்தனாயிருந்து சிவனுக்காக ஓரவாரஞ் சொ
ல்லிப் பார்பதியாற் சபிக்கப்பட்டுப் பாம்பாயி
க் கிடந்தாரென்றும் பரமசிவன் மோகினி வே
டங்கொண்டு விட்டுணுவோடே புணர்ந்து ஐ
யனாரைப் பெற்றாரென்றும் தாமும் பார்பதி
யும் பூங்காவிலே இரண்டு யானை புணரக் கண்
டு தாங்களும் அப்படியே விரும்பிப் புணர்ந்து
விநாயகனைப் பெற்றார்களென்றும் தாருகாவன
த்தில் இருஷிபன்னிமாருடைய கற்பை அழி
த்து இருஷிகளினாலே சபிக்கப்பட்டு இலிங்க
ம் விழுந்துபோகப் பேடியைப்போல இரு
ந்தாரென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறபடியா
ற் சிவன் முதலானவர்கள் வணங்கப்படத் தக்
கவர்கள் அல்ல. இவர்கள் தேவர்களானால் இ
ப்படி முறைகெட்ட செய்கைகளைச் செய்வார்
களோ! அல்லாமலும் உங்கள் திரிமூர்த்திகள்
சத்திகளுடனே சேர்ந்திருந்து சிற்றின்பங்க
ளை அநுபவிக்கிறபடியால் இருவினைக்குமீடா

டிய உடம்புள்ளவர்களாகவும் நம்மோடொத்
த படைப்புக்களாகவும் இருக்கிறார்கள் என்று
விளங்கும். அதற்கு நீங்கள் அவர் உலகவிருத்தி
க்கும் நடைக்குமாகத் தாமும் மனித பாவனை
யாய் நடக்கிறாரென்பீர்கள். அப்படி உலகத்
தைப் பலுகப்பண்ணுகிறதற்குத் தேவன் உ
லகத்தாரைப் போல ஆணும் பெண்ணுமாய்க்
கூடிச் சிற்றின்ப அநுபவங்களையும் முறையற்
ற செய்கைகளையும் நடப்பிக்கவேண்டுமோ?
சருவ வல்லவராகிய தேவன் தமது சித்தத்தில்
நினைத்த மாத்திரத்திலே சகலமும் படைக்கப்
படுமே. அல்லாமல் அவர் தாமாயிருக்கிறவ
ரென்றும் அழியாதவரென்றும் அரூபியென்
றும் வேதஞ் சொல்லுகையில் மனிதராகிய
நம்மைப் போல அவர் உரூபமுள்ளவரென்
றுந் தமக்கொருபாதியாகப் பெண்ணை வைத்தி
ருக்கிறாரென்றும் நினைப்பது அறிவீனமும் பா
வமுமல்லவோ. பின்னுங் கடவுளானவர் உரூபி
யாயிருந்தாற் சருவவியாபகராய் இருக்கக் கூ
டாது. சருவவியாபகராய் இராவிட்டாற் சரு
வஞ்ஞராயும் இருக்கக் கூடாது. அப்படி அ
ரூபியாய் எங்கும் வியாபித்திருக்கிறவரானால்
அவருக்குப் பாவனையாக விக்கிரகங்களை உண்
டாக்கக் கூடாது. அப்படி இருக்க நீங்கள் தெ
ய்வமல்லாதவர்களைத் தெய்வமென்றும் அவர்
களுக்குப் பாவனையென்று கல்லினாலும் மண்
ணினாலும் பொன் வெள்ளி செம்பு முதலான
வைகளினாலும் உண்டாக்கப்பட்ட விக்கிரகங்
களை வணங்குகிறது உங்கள் சரீரத்துக்கு உப

த்திரத்தை வருவித்துக்கொள்ளுகிறது மன்
றி உங்கள் பணத்தையும் ஆத்தும ஈடேற்றத்
தையும் போக்கடித்துக் கொள்ளுகிறதாகவே
இருக்கின்றது. இப்படி நீங்கள் அவரை மன
திலே வணங்காமல் விட்டுத் தெய்வமல்லா
தவர்களைத் தெய்வமென்று வணங்குவதும்
கைவேலையான விக்கிரகங்களை வணங்குவதும்
அக்கினி இருக்கச் சாம்பலிலே அவிப்பாகம்
பண்ணுவதற்கும் உள்ளங்கையிற் பாற்சோற்
றை விட்டுப் புறங்கையை நக்குவதற்கும் ஒ
ப்பாயிருக்கும். இப்படியே உங்கள் ஞானி
களும்.

நட்டுவைத்த தேவரும் நடாதுவைத்த தேவரும்
சுட்டுவைத்த தேவருஞ் சுடாதுவைத்த தேவரும்
கூட்டுவைத்திடத்தை விட்டெழுந்திராத தேவரே
வட்டமிட்டு மாந்தர்கள் வணங்குவாறதெங்ஙனே.
உளியிட்டகல்லுமுருப்பிடித்த செஞ்சாந்தும்
புளியிட்டசெம்பும் பொருளாவதெக்காலம்

என்று சொல்லுகிறார்கள். நீங்களோ அப்
படியல்ல, விக்கிரகங்களை உண்டாக்கி மந்திரத
ந்திரத்துடனே பிரதிட்டை பண்ணி வணங்கு
கிறது முறைமைதானென்றும் அம்முறையினா
லே அந்த விக்கிரகத்திலே தெய்வம் தாபனப்ப
டுமென்றுஞ் சொல்லுகிறீர்கள். உங்கள் பிரதி
ட்டையினாலும் மந்திர தந்திரங்களினாலும் அ
வைகள் தெய்வமாயிருக்குமேயானால் அவை
களுக்குத் தன்னை நிந்திக்கிறவனையும் நேசிக்கி
றவனையும் அறியத்தக்க அறிவின் கருவிகள் உ
ண்டாயிருக்க வேண்டும்.

அப்படி அதினிடத்தில் முன் இருந்த தன்
மை மாற்றப்படாதேயாகில் உருக்கவுருகாமலு

ம் அடிக்க உடையாமலும் இருக்குமே. அப்படியும் இல்லையென்று நீங்கள் தானும் அறிவீர்களே. ஆகையால் இந்த வீண் பிரயாசங்களை விட்டுத் திரியேக கடவுளாய் இருக்கிற தேவனை மாத்திரம் வணங்குங்களென்று புத்திசொல்லுகிறோம்.

---

உ. மனிதருடைய ஆத்துமா மோட்சத்திலாவது நரகத்திலாவது சேர்ந்திருப்பதன்றி மறுபடி பிறக்கமாட்டாதென்பது.

இறந்துபோன மனிதருடைய ஆத்துமா மறுபடியும் பிறக்கமாட்டாதென்று நாங்கள் சொல்ல நீங்களோ உலகத்திலே தேவன் அந்தந்த ஆத்துமாவின் முற்சனன வினைப்பகுதிப்படியே இராசாக்கள் குடிகள் பெரியோர் சிறியோர் சுகவாளிகள் பிணியாளிகள் செல்வர் வறியர் முதலியவர்களாய்ப் பிறக்கப்பண்ணுகிறாரென்றும் அப்படிப்பட்ட யாதொரு காரணம் இல்லாமல் இப்படி வேறு வேறியற்கையாகப் பிறக்கப்பண்ணினாரேயானால் அவர் நீதியுள்ளவரல்லவென்றுஞ் சொல்லுகிறீர்கள். அப்படியானால் நாம் முற்பிறப்பிலே இன்னின்ன பாவத்தைச் செய்தோமென்றும் அதற்காக இப்பிறப்பில் இன்னின்ன ஆக்கினையை அடைகிறோமென்றுந் திட்டமாய் அறிந்திருக்கவேண்டும். அப்படி அறியாதிருக்கையில் ஆக்கினையை அடைவிப்பது முறையற்றசெய்கையாயிருக்கும்.

அல்லாமல் இப்பிறப்பில் வரும்பாடுகளுக்கு முற்பிறப்பிற் செய்த தீவினை காரணமாய் இருந்ததென்றால் முற்பிறப்பிலே தீவினைசெய்

யக் காரணம் என்ன? அதற்கு ஆத்துமா ஆணவமலத்தோடே சம்பந்தப்பட்டிருந்ததுதான் காரணமென்பீர்கள். அப்படியானால் ஆத்துமாக்கள் எல்லாம் அனாதியே ஆணவமலத்தோடே சம்பந்தப்பட்டிருக்கையால் எல்லா ஆத்துமாவும் வித்தியாசம் இல்லாமலே தீவினையைச் செய்திருக்கவேண்டும். அப்படிச் செய்யாதிருந்தால் ஒன்றில் ஒன்று ஏற்றத்தாழ்ச்சியாய் நல்வினை தீவினைகளைச் செய்யவும் பேதாபேதமான அனுபவங்களை அனுபவிக்கவுங் கூடாது. எல்லாம் ஒரே விதமான தனுவையும் ஒரேவிதமான காரணத்தையும் ஒரே புவனத்தையும் ஒரே போகத்தையுங் கொண்டிருக்கவேண்டும். அப்பொழுது ஆண் பெண்ணாகப் பிறக்கவும் நியாயங்காணாது. பின்னை உலகத்திலே பெரியோர் சிறியோர் இராசாக்கள் குடிகள் என்கிற பலபல வித்தியாசம் வரவேண்டியதென்னவென்று கேட்பீர்கள். அது ஒரு உடலிலே கால் கை முதலான உறுப்புகளை ஒன்றுக்கொன்று வித்தியாசமாக உண்டாக்கி இருப்பது போல மனிதரையும் ஒருவருக்கொருவர் வெவ்வேறு வித்தியாசமாக உண்டாக்கியிருக்கிறார். சருவ வல்ல கடவுள் தமது மகிமை விளங்கவும் ஆத்துமாக்கள் சுக அனுபவங்களை அனுபவிக்கவும் வேண்டுமென்கிற சித்தங்கொண்டு ஆதாம் ஏவாள் என்னும் இருவரையும் உண்டாக்கி அவர்கள் வழியாய்ச் சகல சாதியாரையும் பிறக்கப்பண்ணி உலக நடக்கைக்காகப் பலபல வேற்றுமையான நிலையிலே வைத்தி

றுக்கிறார். அதுவே அல்லாமல் முன் குறித்த வித்தியாசங்கள் முற்பிறப்பினாலே வந்ததல்லவென்று தெளிவாக அறியலாம். அப்படியே சிவவாக்கியர் சொல்வது,

கறந்தபால் முலைபுகா கடைந்தவெண்ணெய் மோர்புகா
உடைந்த சங்கினோசையும் உயிர்களுமுடல்புகா
வடிந்தவேரடியினுதிர்ந்த பூமரம்புகா
இறந்துபோன மாண்டர் இனிப்பிறப்பதில்லையே.

---

௩. கிறிஸ்துசெய்த பாவநிவாரணத்தினாலே யல்லாமல் மனிதர் செய்யுந் தருமங்களினாலே கதியடையக் கூடாதென்பது.

மனிதர் எல்லாரும் இயல்பாகவே மனம் வாக்குக் காயங்களாற் பாவஞ்செய்கிறதேயன்றி யாதொரு நன்மையைச் செய்யத் தகுதியற்றவர்களாயிருக்கையாற் கிறிஸ்து இரட்சகர் உண்டாக்கிய இரட்சிப்பினாலன்றி வேறொரு வகையாய்ப் பாவத்துக்கு நிவிர்த்திஉண்டாகமாட்டாதென்று நாங்கள் சொல்ல நீங்கள் தானந் தவம் விரதம் யாத்திரை ஸ்நானம் அந்தியேட்டி முதலான சடங்குகளினாலும் அங்கப்பிரதட்சணம் முதலிய மெய்வருத்தங்களாலும் பாவந் தீர்ந்து கதி அடையலாமென்கிறீர்கள். அவைகளை எல்லாந் தவறாமற் செய்து வந்தும் இன்னுந் தங்கள் பாவந் தீர்ந்ததென்று அத்தாட்சி காணாமலும் ஆறுதல் அடையாமலுந் திரும்ப மற்றொன்றைச் செய்ய எவப்படுகிறார்கள். அவைகளையுஞ் சிலகாலஞ் செய்து அதிலும் ஆறுதல் அடையாமல் வேறொன்றைச் செய்கிறார்கள். இப்படி நாளுக்குநாட்

பலபல கிரியைகளைச் செய்தும் பாவந் தீர்ந்ததென்று அத்தாட்சி காணாமல் மரிக்கிறார்கள். அதின் மேலும் அவர்கள் கதி அடையும்படி அந்தியேட்டி முதலிய தீக்கடன்கள் செய்யப் படுகின்றன. அதிலும் உறுதியில்லாமல் வேறு கிரியைகள் செய்யப்படுகிறது. இப்படிச் செய்யப்படுகிற கிரியைகள் எல்லாம் புறம்பான கிரியைகளென்றும் அந்தக்கிரியைகளை எல்லாம் வழுவாமற் செய்துவந்துந் தங்கள் பாவந் தீரவில்லையென்றும் ஆத்துமாச் சுத்தம் அடையவில்லையென்றும் அனேகர் அறிந்திருக்கிறார்கள். அப்படியே அகப்பேய்ச்சித்தரும் மற்றும் அறிவாளிகளும்.

காசிக்குப் போனாலும் அகப்பேய் கன்மந்தொலையாதே
ஆசித்துவந்தாலும் அகப்பேய் பண்ணியங்கிட்டாதே
தீர்த்தமாடினாலும் அகப்பேய் தீவினைதீராதே
ஊத்தைபோனாலும் அகப்பேய் உள்வினைதீராதே.

என்றும்,

நீட்டிய சடையுமாகி நீர்மூழ்கி நிலத்திற்சேர்ந்து
வாட்டிய உடம்பின் யாங்கள் வரகதி விளைக்குமென்னிற்
காட்டிடைக் கரடிபோகிக் கயமூழ்கிக் காட்டினின்று
வீட்டினை விளைக்கவேண்டும்வெளிந்துரைவிதியெனென்றான்

என்றும்,

ஆண்டபொருளை அறியாதான் செய்தருமம்
மாண்ட மரத்துக்கிளைத்த மண்.

என்றுஞ் சொல்லுகிறார்களே. அதினாலும் நீங்கள் செய்கிற கிரியைகளினாற் பாவந் தீராதென்பது நிசம். இப்படியானாற் கிறிஸ்துநாதர் நமது பாவத்துக்கு என்ன நிவிர்த்தி உண்டாக்கினாரென்றும் அவர் உண்டாக்கின நிவிர்த்தியினாலே நமக்கு இரட்சிப்பு வருவதெப்படியென்றுங் கேட்பீர்கள். மேலே சொல்லி

ய படி நமது பாவத்தின் நிமித்தம் நமக்கு வர ஏதுவாய் இருந்த தேவ கோபாக்கினையைத் தாமே ஏற்றுக்கொண்டு தம்முடைய பாவந் தீருதற்குத் தகுதியான பலியாய்த் தம்மை ஒப்புக்கொடுத்துத் நமது பாவத்தின் நிமித்தந் தமது திரு உதிரத்தைச் சிந்திச் சிலுவையிலே அறையுண்டு மரணமடைந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இப்படியே நம்முடைய பாவங்களுக்குத் தகுதியான நிவிர்த்தியை அவர் உண்டாக்கியிருக்கிறாரென்று விசுவாசத்துடனே பாவத்தை வெறுத்து மனஸ்தாபப்பட்டுக் குணப்பட்டால் மோட்சத்துக்கேற்ற பரிசுத்தத்தையும் அதின் சந்தோஷத்தையும் அவராலே பெற்றுக்கொள்ளுவோம். அப்பொழுது நமக்குச் சமாதானமும் ஆறுதலும் உண்டாகும். பராபரனுடைய மகிமையும் விளங்கும். இதுவே நாங்கள் உங்களுக்கு அறிவிக்கிற சுவிசேஷம். இப்படியிருக்கக் கண்டும் நீங்கள் எங்கள் முன்னோர்கள் எல்லாரும் இந்த மார்க்கத்தின் படி நடக்கவில்லை. இது ஒரு புதுமார்க்கம் அல்லவோ, நாம் இதின்படி எப்படி நடக்கலாம் என்றுங் கிறிஸ்துநாதரை முற்காலத்தில் இருந்த ஒருவரும் விசுவாசிக்கவில்லையேயென்றுஞ் சொல்லுவீர்கள். அப்படி அல்ல, ஆதிமனிதராகிய ஆதாமும் ஏவாளும் பாவத்துக்குட்பட்டபொழுதே அவர்களும் அவர்கள் சந்ததியாகிய மனிதர் எல்லாரும் நரகத்துக்கு ஏதுவானார்கள் என்பதைப் பராபரன் கண்டு அவர்கள் மேலே கொண்ட இரக்கத்

தினாலே ஒரு இரட்சகரை அனுப்புவோமென்று குறிப்பாகச் சொல்லியிருந்தார். அன்று தொட்டு இந்த மார்க்கம் உலகத்திலே வழங்கி வருகின்றது. எப்படியெனில் கிறிஸ்துநாதர் பிறக்கிறதற்கு முன் இருந்தவர்களும் அவர் வருவாரென்று விசுவாசித்து அவராலே இரட்சிப்பைப் பெற்றார்கள். பின்பு பராபரன் நியமித்த காலத்திலே அவர் பூமண்டலத்திலே வந்து பிறந்தார். அவரைக் குறித்துத் தீர்க்கதரிசிகள் எழுதியிருந்தபடியே ஒன்றுந் தப்பாமல் நடந்தது. பின்னையும் அவர் தமது மார்க்கத்தை நிலைநிறுத்தி அதை உலகம் எங்கும் அறிவிக்கும்படியாய்த் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்களும் அப்படியே செய்துவந்தார்கள். ஆகையால் இந்த மார்க்கம் புதியதுமல்ல, உங்கள் முன்னோர்கள் இதை அறியாதிருந்தார்களோ அன்றி அறிந்து இதின்படி நடக்கத் தகாதென்றிருந்தவர்களுமல்ல. அல்லாமல் உங்கள் முன்னோர்கள் தங்கள் தகாத குணத்தினாலே ஒரு தப்பிதத்தைச் செய்தால் நீங்களும் அப்படிச் செய்யவேண்டுமா? பிதாவானவன் களவெடுத்தாற் பிள்ளையுங் களவெடுக்கவேண்டுமா? அப்படிச் செய்தாற் பிதாச் செய்ததை அல்லவோ பிள்ளையுஞ் செய்தானென்று அவனை இராசாக்கள் விடுவார்களோ? விடமாட்டார்களே. ஆகையினாற் பிதாக்கள் செய்த நற்காரியங்களே அன்றித் துற்காரியங்கள் பராபரனுக்கும் மனிதருக்குந் தகாதென்று அறிந்து உங்கள் முன்னோர்கள் செய்

த நற்காரியங்களை எடுத்துக்கொண்டு துற்காரியங்களைத் தள்ளிப்போடுங்கள். மேலும் கிறிஸ்தவர்கள் சாதிபேதம் பார்க்கிறதில்லையென்கிறீர்கள். மெய்தான். அது பார்க்கவேண்டிய காரியம் அல்ல. ஒவ்வொருவனுந் தன் தன் ஒழுக்கத்தினாலே தாழ்ந்தவனும் உயர்ந்தவனுமாய் இருப்பதன்றி ஆதியிலே பராபரன் மனிதரைப் படைத்த பொழுது இப்படிப் பலபல சாதியாகப் படைக்கவில்லை. சாதிபேதம் இயல்பாக உள்ளதல்லவென்பதற்கு அத்தாட்சி.

சாதியாவதேதடா சலந்திரண்ட நீரல்லோ
பூதமைந்துமொன்றல்லோ புலன்களைந்துமொன்றல்லோ
காதுவாளி காரைகம்பி சூடகம்பொன்னொன்றல்லோ
சாதிபேதமோதுகின்ற தன்மையென்னதன்மையே.

ஒழுக்கமுடைமை குடிமை
இழுக்கமிழிந்த பிறப்பாய் விடும்.

என்றுஞ்சொன்னார்களே.

பின்னையும் ஊருக்குப் போகப் பலவழி இருக்கிறதுபோல மோட்சஞ் சேருகிறதற்கும் பலவிதமான மார்க்கங்கள் உண்டு. அதில் எந்த மார்க்கத்திலே என்றாலும் அதற்கடுத்த முறைபோலே நடந்தால் மோட்சம் அடையலாமென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அது பெரிய தப்பு. ஏனென்றால் ஒரு மார்க்கம் விக்கிரகங்களை வைத்து வழிபடுகிறதுதான் மோட்சத்துக்குப் போகிற வழியென்று சொல்ல மற்றொரு மார்க்கம் விக்கிரகாராதனை பாவமென்கிறது. ஒரு மார்க்கம் அனேக தேவர்களை வணங்க வேண்டுமென்று சொல்ல வேறொரு மார்க்கம் அனேக தேவர்களை வணங்குகிறவனுக்கு

ஆக்கினை வருமென்று சொல்லுகிறது. இப்ப
டிப்பட்ட மார்க்கம் இரண்டும் ஒன்றித்ததாய்
இருக்குமோ? ஒரு தேசத்தில் இருந்து வேறொ
ரு தேசத்துக்குப் போக நாலுபேர் புறப்ப
ட்டு ஒரு வழியாய் நடவாமல் ஒவ்வொருத்தன்
ஒவ்வொரு திக்காக நாலுதிக்கையும் நோக்கிப்
போனால் தாங்கள் முன் குறித்த தேசத்திற்
போய்ச் சேருவார்களோ? அந்தத் தேசம் இ
ருக்கிற திக்கை நோக்கிப் போனவனே அன்றி
மற்ற மூவருஞ் சேரமாட்டார்களே. அப்ப
டி இருக்க மோட்சஞ் சேர விரும்புகிறவர்க
ள் எந்த மார்க்கத்திலே நின்றும் அந்த மார்க்க
முறைப்படி நடந்தால் மோட்சத்திலே போ
ய்ச் சேரலாமென்று எண்ணுவது மோசம். அ
வர் அருளிச்செய்த வேதமும் ஒன்று. தம்மை
அடைந்தவர்களுக்கு என்று அவர் நியமித்த
கதியும் ஒன்று. அப்படி முன்னுள்ள ஞானி
களும்,

கடவுளொருவனுண்டே வேதமொன்றே
காரணகுருவுஞ் சைதன்னியமொன்றே
அடைவுடனே அவர் அருளும் பதவியொன்றே
அம்புவியில் மனுப்பிறவி தானுமொன்றே.
நடைவழியும் பலமனுக்கொன்றேயல்லால்
நால்வேதமறுசமய நடக்கைவேறாய்த்
திடமுடைய தேவர்பலர் உண்டென்போர்கள்
தீநரகுக்குள்ளாவர் திண்ணந்தானே. என்றும்,

அண்டரண்டங் கடந்துநின்ற சோதிதானே
அவனிதனிலுடைந்தகல்லில் அமருமோதான்
எண்டிசையுமெவ்வுயிருமானசோதி
யீனமான கல்லுகளிலிருப்பனோதான்

தொண்டர்களே உங்களுக்கெளித்த வார்த்தை
சொன்னவர்க்குங் கேட்டவர்க்குஞ் சொற்சமில்லை
மண்டலத்திற் சற்குருவை வணங்கி நின்றால்
மாறாத பெருவாழ்வில் வாழலாமே.

என்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படி இருப்பதினால் மோட்சம் பெறுவ
தற்கான வழி ஒன்றே அல்லாமற் பலபலவல்ல.
அந்த வழி கிறிஸ்து மார்க்கமேயன்றி வேற
ல்ல. பிரியமானவர்களே, இப்பொழுது நீங்கள்
வாசித்துக் கண்ட நியாயங்களினாலும் உங்கள்
ஞானிகள் சொல்லியிருக்கிற பாட்டுக்களினாலு
ம் உங்கள் மார்க்கத்திலே மனிதர் மோட்ச கதி
யடையும் பொருட்டாகச் சொல்லியிருக்கிற
வழிவகைகள் எல்லாந் தவறென்றும் அவைக
ள் மனிதருடைய புத்தியினாலே நியமிக்கப்பட்
டதேயன்றித் தேவவாக்கினால் நியமிக்கப்பட்ட
தல்லவென்றுந் தெளிவாய்த் தெரியும். ஆத
லால் அன்புள்ளவர்களே, உங்கள் விக்கிரகவண
க்கத்தையும் வீணான சடங்குகளையும் விட்டு ம
னிதருக்கும் பராபரனுக்கும் மத்தியஸ்தனாகிய
இயேசுக்கிறிஸ்துவின் மேல் நம்பிக்கைவைத்து
ப் பாவங்களை விட்டு நீங்கி மோட்சநலத்தைப்
பெறும்படி வகை பார்ப்பீர்களாக.

---

முற்றிற்று.